தினமணி

கல்லூரி மாணவிகளுக்கு சர்வதேச தற்காப்புக் கலை பயிற்சி

சென்னை, நவ.25: தங்களுக்கு எதிராகநடைபெறும்குற்றச் சம்பவங்களிலிருந்து தற்காத்துக் கொள்வது குறித்து கல்லூரி மாணவிகளுக்கு செயல்முறை விளக்க பயிற்சி சென்னையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு குறித்த சர்வதேச தினத்தையொட்டி சென்னையில் உள்ள ரஷ்ய அறிவியல் மற்றும் கலாசார மையம், வேப்பேரியில் உள்ள குருஸ்ரீ சாந்திவிஜய் ஜெயின் மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் இந்த முகாம்கள் நடைபெற்றன.

உளவியல் பயிற்சி: ரஷ்ய அறிவியல் மற்றும் கலாசார மையத்தில் நடைபெற்ற முகாமில் சர்வைவல் இன்ஸ்டிங்ட் அமைப்பின் நிறுவனர் அனுராப் மாதவன் தற்காப்புக் கலையின் முக்கியத்துவம் குறித்து விளக்கினார்.

எதிரிகளை எந்த இடத்தில்தாக்குவது? ஆபத்துகள் வருமுன் காப்பது எவ்வாறு? மற்றும் உளவியல் ரீதியாக பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய பாதுகாப்பு நடைமுறைகள் குறித்த பயிற்சிகளையும் அவர் செய்து காட்டினார்.

அதன் அடிப்படையில் பாதுகாப்பு கவசங்கள் அணிந்த எதிரினியை ஆக்ரோஷத்துடன் எதிர்கொள்வது போன்ற நிகழ்ச்சியை மாணவிகள் செய்து காட்டினர்.

நடிகை லட்சுமிராமகிருஷ்ணன், இந்திய-ரஷ்ய பெண்கள் அமைப்பின் துணைத் தலைவர் ஷோபனா ரமேஷ், சர்வைவல் இன்ஸ்டிங்ட் அமைப்பின் பயிற்சி மேலாளர் வி.வசுமதி

தற்காப்புக்கலை செயல்மு
(வலது படம்) வேப்பேரி ஜெ

கழ்ச்சியில் **வேப்பேரி** பெண்க
பின் சார்ட
சாந்திவிஜ
கல்லூரியி
மில் பெ
புக் கலை